# මුදල් අමාත්‍යාංශය
# நிதி அமைச்சு
# MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700

ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823

වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: PED/I/CEB/2/16

ඔබේ අංකය / உமது இல. / Your No.:

දිනය / திகதி / Date: 2021.05.03

அமைச்சுக்களின் செயலாளர்கள்,

இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்,

வணிக நிறுவனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும்

அரசுடமைக் கம்பனிகளின் தவிசாளர்கள் அனைவருக்கும்.

**நாட்டின் துரித வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் தேவைப்பாடுகளைப் பூரணப்படுத்துவதற்காக முதலீட்டு முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்ளல், மதிப்பீடுசெய்தல் மற்றும் அவற்றினை அங்கீகரித்தல் என்பனவற்றிற்காக சாத்தியமான பொறிமுறையொன்றினைப் பயன்படுத்துதல், அத்தகைய முன்மொழிவுகளை துரிதமாக செயற்படுத்துவதற்காக நிரல் அமைச்சுக்களுக்கும் <u>அரச முகவர் நிறுவனங்களுக்கும் வசதியளித்தல்.</u>**

1. துரித முதலீடுகளுக்கான தேவைப்பாட்டினை உணர்ந்து, அமைச்சரவையானது, 2021 ஆம் ஆண்டு பெப்புரவரி மாதம் 22 ஆம் திகதிய அதன் தீர்மானத்திற்கமைய, திறைசேரி செயலாளரின் தலைமையின் கீழ், அரச மற்றும் தனியார் துறைகளில் அனுபவமிக்க சிரேஷ்ட தொழில் வல்லுநர்களை உள்ளடக்கி நிலையியல் மதியுரை சபையொன்றினையும் (SAB), சிரேஷ்ட அரச அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, முதலீடுகள் தொடர்பிலான அமைச்சரவை நியமன முகாமைத்துவக் குழுவினையும்(CAMCI) தாபித்தது. அதற்கமைய, இத்தகைய தீர்க்காலோசனையினை எளிதாக்குவதற்குத் தேவையான எவரேனும் அலுவலரினை அல்லது நிபுணரினை குழுவுக்குத் ஒத்துத் தேர்ந்தெடுப்பதற்கான அதிகாரத்தினையும் அமைச்சரவையானது குறித்த அமைச்சரவை நியமன முகாமைத்துவக் குழுவிற்கு வழங்கியுள்ளது.
2. முதலீடுகள் தொடர்பான அனைத்து விடயங்களும் இறுதிக்கு இறுதியான தீர்வுகளை அடையப்பெறுவதனை உறுதிசெய்வதற்கான அதிகாரத்துடன், அமைச்சரவையானது, பெறுகை வழிகாட்டுதல்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏற்பாடுகளுடன் முரண்படாத வகையில், அமைச்சரவை நியமன முகாமைத்துவக் குழு (CAMCI) மற்றும் நிலையியல் மதியுரைச் சபை (SAB) என்பனவற்றிற்கு அதிகாரமளித்துள்ளது. முதலீடுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன நம்பகமான முறையில இடம்பெறுவதனை உறுதி செய்தல், ஒன்றிணைந்த ஏனைய துணைச் செயற்பாடுகளை மேற்கொள்கையில் பின்பற்றப்பட வேண்டியுள்ள முறைமையினைத் தீர்மானித்தல், முதலீட்டாளர்கள் மற்றும் அவர்களோடு தொடர்புடைய பங்குதாரர்கள் மற்றும் முகவர் நிறுவனங்களுடன் அவசியமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுதல், முதலீட்டாளர்களுடன் தொடர்புகளைப் பேணல், பெறப்பட்ட முதலீட்டு முன்மொழிவுகளிலுள்ள தடைகளை நீக்கம்செய்தல்

என்பன உள்ளடங்கலாக முதலீட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட முதலீட்டு முன்மொழிவுகளை மதிப்பீடுசெய்தல் என்பன இவற்றின் பணிகளாக அமைகின்றன. இவற்றில், முறைசார தகவல் வெளிப்படுத்தாமை ஒப்பந்தமொன்றில் பொதுத் திறைசேரி கைச்சாத்திட்டதன் விளைவாக கோரப்பட்ட ஆவணங்களை முதலீட்டாளர்களுக்கு சமர்ப்பிப்பதற்கும் திறைசேரி செயலாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

3. ஏற்கனவே பின்தங்கிய நிலையிலுள்ள முதலீட்டுக் கருத்திட்டத் திரட்டினை துரிதப்படுத்துவதற்காக நிலையியல் மதியுரை சபையானது (SAB) திறைசேரி செயலாளருக்கு ஒத்துழைப்பு வழங்கும். அதில், எந்தவொரு நிரல் முகவர் அல்லது நிறுவனத்துடனும் தொடர்புகளைப் பேணும் வகையில் தேவைக்கேற்ப, மதியுரை சபைக்கு (SAB) அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சரவை நியமன முகாமைத்துவக் குழுவினால் (CAMCI) வழிப்படுத்தப்பட்டவாறு ஏதேனும் முகவர் நிறுவனத்துடன் தொடர்புகளைப் பேணுவதற்கும் நிலையியல் மதியுரை சபைக்கு (SAB) அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுதோடு, அதில் உடனடி இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல் மற்றும் அத்தகைய முதலீட்டுக் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல் என்ற விடயமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

4. அதற்கமைய, மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கருத்திற்கொண்டு, கிடைக்கப்பெற்றும் இற்றை வரையில் இறுதியாக்கப்படாத முதலீட்டு முன்மொழிவுகள் பற்றிய விபரம் மற்றும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகைகள் என்பனவற்றின் நியதிகள் காரணமாக பின்னடைகின்ற முதலீட்டுக் கருத்திட்டங்களின் விபரம் என்பனவற்றினை இத்துடன் பின்னிணைப்பு 1 என இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் அமைச்சரவை நியமன முகாமைத்துவக் குழுவிற்கு (CAMCI) அனுப்புமாறு அமைச்சுக்களின் அல்லது இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள் அனைவரும் வேண்டப்படுகின்றனர். அரசு கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையான அரசுடமைக் கம்பனிகள் இரண்டும் உள்ளடங்கலாக அரசுடமைத் தொழில்முயற்சிகளின் தவிசாளர்கள், அத்தகைய முன்மொழிவுகளை தமது நிரல் அமைச்சுக்களின் ஊடாக அமைச்சரவை நியமன முகாமைத்துவக் குழுவுக்கு (CAMCI) சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

5. அமைச்சரவை நியமன முகாமைத்துவக் குழுவு (CAMCI) மற்றும் நிலையியல் மதியுரை சபை (SAB) என்பனவற்றிற்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கும், குறித்த விபரங்களைப் பின்தொடர்வதற்கும், அவற்றுடன் ஒன்றித்துச் செயற்படுவதற்கும் தமது அதிகாரிகளைப் பணிக்குமாறு செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரசு கூட்டுத்தாபனங்கள் மற்றும் பூரண அரசுடமைக் கம்பனிகள் இரண்டும் உள்ளடங்கலாக அரசுடமைத் தொழில்முயற்சிகளின் தவிசாளர்கள், அனைவரும் வேண்டப்படுகின்றனர்.

6. மேலே பந்தி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய அனைத்து முன்மொழிவுகள், மற்றும் குறித்த கருத்திட்டங்கள் தொடர்பில் ஏதும் தெளிவுரைகள் தேவைப்படின், பொது தொழில்முயற்சிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினை பின்வருவனவற்றின் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

6.1. மின்னஞ்சல் - camci@ped.treasury.gov.lk.

6.2. தொலைபேசி- 0112484510

**ஒப்பம்/-**
**எஸ்.ஆர். ஆட்டிகல**
**பொதுத் திறைசேரி செயலாளர்**

*பிரதி – கணக்காய்வாளர் நாயகம்*

**பின்னிணைப்பு 1**

| | |
|---|---|
| 1. அமைச்சு/திணைக்களம்/அரசுடமைத் தொழில் முயற்சியின் பெயர் | |
| 2. முதலீட்டு முன்மொழிவு/ கருத்திட்டத்தின் பெயர் : | |
| 3. முதலீட்டு முன்மொழிவு/ கருத்திட்டத்தின் சுருக்க விபரம்: | |
| 4. முதலீட்டுத் தொகை : | |
| 5. அமைச்சு/திணைக்களம்/அரசுடமைத் தொழில் முயற்சியில் தொடர்பு கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர் பெயர் | |
| 6. தொடர்பு கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர் முகவரி மற்றும் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் (உத்தயோகபூர்வ முகவரி, மின்னஞ்சல் முகவரி, நிலையான மற்றும் செல்லிடத் தொலபேசி இலக்கங்கள்) | |